ஊடக அறிக்கை

தொடர்பூட்டல் திணைக்களம், இல.30, சனாதிபதி மாவத்தை, கொழும்பு 01, இலங்கை
+94 11 2477424 / +94 11 2477423 +94 11 2346257
communications@cbsl.lk / dcommunications@cbsl.lk www.cbsl.gov.lk

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

| | |
|---|---|
| வெளியிடுபவர் | தொடர்பூட்டல் திணைக்களம் |
| திகதி | 2021.11.08 |


# கொவிட்-19 மூலம் பாதிக்கப்பட்ட தொழில்களுக்கும் தனிப்பட்டவர்களுக்குமான கடனை காலம்தாழ்த்திச் செலுத்தும் வசதி ரூ.4,000 பில்லியனை விஞ்சியுள்ளது: சௌபாக்யா கடன்களின் தொகை ரூ.179 பில்லியனைக் கடந்துள்ளது

இலங்கை மத்திய வங்கியினால் மேற்பார்வை செய்யப்படுகின்ற நிதியியல் நிறுவனங்களூடாக கொவிட்-19 மூலம் பாதிக்கப்பட்ட கடன்பெறுநர்களுக்கு உதவுவதற்கு இலங்கை மத்திய வங்கி பல்வேறு திட்டங்களை நடைமுறைப்படுத்தியுள்ளது. பாதிக்கப்பட்ட கடன்பெறுநர்களுக்காக மீள்கொடுப்பனவுக் காலங்களை நீடித்தல், சலுகை வட்டி வீதங்கள், தொழிற்படு மூலதனக் கடன்கள், படுகடனை காலம்தாழ்த்திச் செலுத்தும் வசதிகள், கொடுகடன் வசதிகளை மீளக்கட்டமைத்தல்/ மீள அட்டவணைப்படுத்தல் போன்றவற்றை இத்திட்டங்கள் உள்ளடக்குகின்றன.

பாதிக்கப்பட்ட பல்வேறு துறைகளுக்கு அதாவது சுற்றுலா, ஆடை, பெருந்தோட்டம், தகவல் தொழில்நுட்பம், ஏற்பாட்டுச் சேவை வழங்குநர்கள், முச்சக்கரவண்டி உரிமையாளர்கள், பாடசாலை வான்களைத் தொழிற்படுத்துவோர், பாரஊர்திகள், பொருட்களை கொண்டுசெல்கின்ற சிறிய ரக வாகனங்கள் மற்றும் பேருந்துக்கள் போன்ற சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகளுக்கும் தனியார் துறை ஊழியர்களுக்கும் இச்சலுகைகள் அதிகளவில் உதவின.

இலங்கை மத்திய வங்கியினால் நடைமுறைப்படுத்தப்படுகின்ற சலுகைத் திட்டங்களுக்கமைவாக, நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகளை முன்னுரிமைப்படுத்தி நிதியியல் நிறுவனங்கள் மொத்தமாக ரூ.4,083.8 பில்லியன் கொண்ட தொகையுடைய சலுகைககளுக்காக 2.9 மில்லியனுக்கும் மேற்பட்ட கோரிக்கைகளுக்கு அனுமதியளித்துள்ளன (அட்டவணை 1). உரிமம்பெற்ற வங்கிகளினால் 2021.12.31 வரையும் வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களினால் 2022.03.31 வரையும் நீடிக்கப்பட்டிருந்த இச்சலுகைகள், தொழில்களை இழத்தல், வருமானம் குறைவு, வியாபாரத் தொழிற்பாடுகள் சுருக்கமடைதல், வியாபாரங்களை மூடுதல் என்பன காரணமாக நிதியியல் இடர்பாடுகளுக்கு முகங்கொடுத்த மேற்குறித்த குழுக்களுக்கு ஆதரவளிப்பதற்கு உதவியுள்ளது.

சுற்றுலாத் துறை, 2019 தொடக்கம் பாதிக்கப்பட்டுவருகின்றது என்பதனைக் கருத்திற்கொண்டு சுற்றுலாத் துறையில் பாதிக்கப்பட்ட கடன்பெறுநர்களுக்கான விசேட சலுகைத் திட்டங்கள் காலத்திற்குக் காலம் தொடர்ந்தும் வழங்கப்பட்டதுடன் உரிமம்பெற்ற வங்கிகளினால் 2022.06.30 வரையும் வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களினால் 2022.03.31 வரையும் நீடிக்கப்பட்டன. அதற்கமைய, நிதியியல் நிறுவனங்கள் இதுவரையிலும் அத்தகைய சலுகைகளுக்கான 24,831 கோரிக்கைகளுக்கு அனுமதியளித்துள்ளன (அட்டவணை 2).

கொவிட்-19 மூலம் பாதிக்கப்பட்ட பயணிகள் போக்குவரத்துத் துறையிலுள்ள தொழில்களுக்கும் தனிப்பட்டவர்களுக்கும் வழங்கப்பட்ட குத்தகை வசதிகளுக்கான கடனை காலம்தாழ்த்திச் செலுத்தும் வசதிகள் போன்ற விசேட சலுகைகள் ஆரம்பத்தில் 2021.09.30 வரை வழங்கப்பட்டதுடன் உரிமம்பெற்ற வங்கிகளினால் 2021.12.31 வரையும் வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களினால்

2022.03.31 வரையும் மேலும் நீடிக்கப்பட்டன. அத்தகைய சலுகைகளுக்கான 117,085 கோரிக்கைகளுக்கு நிதியியல் நிறுவனங்கள் அனுமதியளித்துள்ளன (அட்டவணை 3).

படுகடனை காலம்தாழ்த்திச் செலுத்தும் வசதிக்கு மேலதிகமாக, வங்கியல்லா நிதி நிறுவனங்கள் துறையின் பாதிக்கப்பட்ட கடன்பெறுநர்களுக்காக ஏற்கனவே காணப்படுகின்ற கொடுகடன் வசதிகளை நீண்டகாலமொன்றுக்கு மீள்கட்டமைப்பதற்கு (இணங்கத்தக்க புத்துயிரளித்தல் திட்டமொன்றினைச் சமர்ப்பிப்பதற்குட்பட்டு) அல்லது எதிர்கால வட்டி, கட்டணங்கள் மற்றும் ஏற்புடைய அறவீடுகளைத் தள்ளுபடி செய்வதன் மூலம் அத்தகைய கோரிக்கைகள் வசதிப்படுத்தப்படுவதாகவிருப்பின் ஏற்கனவே காணப்படுகின்ற கொடுகடன் வசதிகளை முன்கூட்டியே தீர்ப்பனவு செய்வதற்கான தெரிவு வழங்கப்பட்டுள்ளது. இத்தெரிவுகளை 2022.03.31 வரை வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களின் கடன்பெறுநர்கள் பயன்படுத்திக்கொள்ளமுடியும்.

இலங்கை மத்திய வங்கியானது சலுகைக் காலப்பகுதியின் போது ஒன்றுசேர்கின்ற தண்ட வட்டியினை தள்ளுபடிசெய்தல், ஏற்கனவே காணப்படுகின்ற கொடுகடன் வசதிகளை மீளக்கட்டமைத்தல், வட்டிக் தள்ளுபடிகளை வழங்குதல், முன்கூட்டியே தீர்ப்பனவுசெய்யும் கட்டணங்கள் மற்றும் வேறு அறவீடுகளைத் தள்ளுபடிசெய்தல், கடன் அறவீடுகள் மீதான சட்ட நடவடிக்கையினை இடைநிறுத்துதல், ரூ.500,000 கொண்ட பெறுமதிக்குக் குறைவான காசோலைகளின் செல்லுபடியாகும் காலத்தினை நீடித்தல், நிதியியல் நிறுவனங்களினால் வழமையாக அறவிடப்படுகின்ற சில கட்டணங்களை நிறுத்துதல் (காசோலை திரும்புதல்கள், கொடுப்பனவை நிறுத்துதல் போன்றவற்றுக்கானவை) அத்துடன் கடன் அட்டைகள் மீது ஏற்புடைய தாமதக் கொடுப்பனவுக் கட்டணங்களை இடைநிறுத்துதல் உள்ளடங்கலாக மேலதிக சலுகைகளை வழங்குவதற்கும் நிதியியல் நிறுவனங்களைக் கோரியது. தனியே பாதகமான கொடுகடன் தகவல் பணியகப் பதிவுகளை அடிப்படையாகக் கொண்டு, தகைமையுடைய கடன்பெறுநர்களிடமிருந்து கிடைக்கும் கடன் விண்ணப்பங்களை நிராகரிப்பதனை தவிர்க்குமாறும் நிதியியல் நிறுவனங்கள் கோரப்பட்டுள்ளன.

ஆறு மாதங்களைக் கொண்ட சலுகைக் காலப்பகுதி உள்ளடங்கலாக 24 மாதங்களைக் கொண்ட மீள்கொடுப்பனவு காலப்பகுதியுடன் ஆண்டிற்கு 4 சதவீத வட்டி வீதத்தில் தொழிற்படு மூலதனக் கடன்களை வழங்குவதற்கு சௌபாக்யா கொவிட்-19 புத்துயிரளித்தல் கடன் திட்ட வசதியினை மூன்று கட்டங்களில் அறிமுகப்படுத்தியதனூடாக கொவிட்-19 மூலம் பாதிக்கப்பட்ட வியாபாரங்களுக்கு புத்துயிரளித்தலுக்கு இலங்கை மத்திய வங்கி மேலும் வசதியளித்துள்ளது. இத்திட்டத்தினூடாக இலங்கை மத்திய வங்கி சௌபாக்யா கொவிட்-19 புத்துயிரளித்தல் கடன் திட்ட வசதியின் கீழ் ரூ.179,280 மில்லியனை விடுவிப்பதற்கு 62,574 விண்ணப்பங்களைச் செயன்முறைப்படுத்தியது. இதில் உரிமம்பெற்ற வங்கிகள், நாடு முழுவதும் 53,152 பாதிக்கப்பட்ட வியாபாரங்கள் மத்தியில் ரூ.165,513 மில்லியனைப் பகிர்ந்தளித்துள்ளன. கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றின் தொடர்ந்துவந்த அலைகளைக் கருத்திற்கொண்டு, சௌபாக்யா கொவிட்-19 புத்துயிரளித்தல் கடன் திட்டத்தின் கீழான கடன்களுக்கு ஏற்புடைய சலுகைக் காலங்களும் கடன் மீள்கொடுப்பனவுக் காலங்களும் பல தடவைகள் நீடிக்கப்பட்டன. அதற்கமைய, 2021.12.31 வரை படுகடனை காலம்தாழ்த்திச் செலுத்தும் வசதி வழங்கப்பட்ட அதேவேளை மீள்கொடுப்பனவுக் காலம் 36 மாதங்களாக 12 மாதங்களால் நீடிக்கப்பட்டுள்ளன. இதற்குமேலதிகமாக, சௌபாக்யா மற்றும் சுவசக்தி கடன் திட்டங்கள் போன்ற இலங்கை மத்திய வங்கியினால் நடைமுறைப்படுத்தப்படுகின்ற ஏனைய கடன் திட்டங்களின் பயன்பெறுநர்களுக்கு வட்டி வீதங்களைக் குறைத்தல் மற்றும் படுகடனை காலம்தாழ்த்திச் செலுத்தும் வசதியினை அறிமுகப்படுத்தல் போன்றன வாயிலாக இவ்விக்கட்டான தருணத்தில் மேலும் நிவாரணம்

அளிக்கப்பட்டது. பேரண்டப் பொருளாதார மற்றும் நிதியியல் முறைமை உறுதிப்பாட்டினை நிச்சயப்படுத்துவதற்கான இலங்கை மத்திய வங்கியின் ஆறு மாத வழிகாட்டலில் அண்மையில் அறிவிக்கப்பட்டவாறு கடன்பெறுநர்களுக்கு மேலும் நிவாரணமளிக்கும் நோக்குடன் கடனை காலம்தாழ்த்திச் செலுத்தும் காலப்பகுதியில் பாதிக்கப்பட்ட கடன்பெறுநர்களிடமிருந்து இலங்கை மத்திய வங்கியினால் மேற்பார்வை செய்யப்படுகின்ற நிதியியல் நிறுவனங்களினால் அறவிடப்படுகின்ற வட்டிச் செலவின் ஒரு பாகத்திற்கு ஈடளிப்பதற்கு ரூ.15 பில்லியன் கொண்ட திரவத்தன்மை ஆதரவு வழங்கப்படவுள்ளது.

அதேவேளை, நிதியியல் வாடிக்கையாளர்களிடமிருந்து கிடைக்கப்பெறுகின்ற முறைப்பாடுகளை கையாளுவதற்கு 2020 ஓகத்தில் இலங்கை மத்திய வங்கி, நிதியியல் வாடிக்கையாளர் தொடர்புகள் திணைக்களத்தினை நிறுவியதுடன் இலங்கை மத்திய வங்கியின் இணையத்தளத்தில் கிடைக்கப்பெறுகின்ற படிவங்களைப் பயன்படுத்தி கடன்பெறுநர்கள் தமது முறைப்பாடுகளை நிதியியல் வாடிக்கையாளர் தொடர்புகள் திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கக்கூடியதாகவிருக்கின்றது.

**அட்டவணை 1: கொவிட்-19 மூலம் பாதிக்கப்பட்ட கடன்பெறுநர்களுக்கு வழங்கப்பட்ட சலுகைகள்**

| கடனை காலம்தாழ்த்திச் செலுத்தும் கட்டங்கள் | உரிமம்பெற்ற வங்கிகள் | | | | வங்கியல்லா நிதியியல் நிறுவனங்கள் | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | கிடைக்கப் பெற்ற கோரிக்கைகளின் எண்ணிக்கை | அனுமதிக்கப் பட்ட கோரிக்கைகளின் எண்ணிக்கை | அனுமதிக் கப்பட்ட கோரிக்கைகளின் சதவீதம் | நிலுவையாக வுள்ள மூலதனம் (ரூ.பில்) | கிடைக்கப் பெற்ற கோரிக்கைகளின் எண்ணிக்கை | அனுமதிக்கப் பட்ட கோரிக்கைகளின் எண்ணிக்கை | அனுமதிக் கப்பட்ட கோரிக்கைகளின் சதவீதம் | நிலுவையாக வுள்ள மூலதனம் (ரூ.பில்) |
| கொவிட்-19 (1ஆம் அலை) | 1,435,119 | 1,336,136 | 93.10 | 2,280.7 | 985,063 | 847,491 | 86.03 | 355.3 |
| கொவிட்-19 (2ஆம் அலை) | 136,184 | 121,530 | 89.24 | 726.9 | 143,382 | 111,038 | 77.44 | 62.1 |
| கொவிட்-19 (3ஆம் அலை) | 171,511 | 154,841 | 90.28 | 552.4 | 393,893 | 356,634 | 90.54 | 106.4 |
| **மொத்தம்** | **1,742,814** | **1,612,507** | **92.52** | **-** | **1,522,338** | **1,315,163** | **86.39** | **-** |

**அட்டவணை 2: சுற்றுலாத் துறைக்கு வழங்கப்பட்ட சலுகைகள்**

| கடனை காலம்தாழ்த்திச் செலுத்தும் கட்டங்கள் | உரிமம்பெற்ற வங்கிகள் | | | | வங்கியல்லா நிதியியல் நிறுவனங்கள் | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | கிடைக்கப் பெற்ற கோரிக்கைகளின் எண்ணிக்கை | அனுமதிக்கப் பட்ட கோரிக்கைகளின் எண்ணிக்கை | அனுமதிக் கப்பட்ட கோரிக்கைகளின் சதவீதம் | நிலுவையாக வுள்ள மூலதனம் (ரூ.பில்) | அனுமதிக்கப் பட்ட கோரிக்கைகளின் எண்ணிக்கை | அனுமதிக்க ப்பட்ட கோரிக்கைகளின் சதவீதம் | கிடைக்கப் பெற்ற கோரிக்கைகளின் எண்ணிக்கை | நிலுவையாக வுள்ள மூலதனம் (ரூ.பில்) |
| சுற்றுலா (கட்டம் 1) | 5,919 | 4,258 | 71.94 | 113.9 | 1,441 | 1,389 | 96.39 | 3.6 |
| சுற்றுலா (கட்டம் 2) | 6,903 | 5,961 | 86.35 | 214.0 | 6,485 | 5,792 | 89.31 | 5.6 |
| சுற்றுலா (கட்டம் 3) | 7,318 | 6,351 | 86.79 | 220.1 | 1,266 | 1,080 | 85.31 | 1.8 |
| **மொத்தம்** | **20,140** | **16,570** | **82.27** | **-** | **9,192** | **8,261** | **89.87** | **-** |

**அட்டவணை 3: பயணிகள் போக்குவரத்துத் துறைக்கு வழங்கப்பட்ட சலுகைகள்**

| கடனை காலம்தாழ்த்திச் செலுத்தும் கட்டங்கள் | உரிமம்பெற்ற வங்கிகள் | | | | வங்கியல்லா நிதியியல் நிறுவனங்கள் | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | கிடைக்கப் பெற்ற கோரிக்கைகளின் எண்ணிக்கை | அனுமதிக்கப் பட்ட கோரிக்கைகளின் எண்ணிக்கை | அனுமதிக் கப்பட்ட கோரிக்கைகளின் சதவீதம் | நிலுவையாக வுள்ள மூலதனம் (ரூ.பில்) | கிடைக்கப் பெற்ற கோரிக்கைகளின் எண்ணிக்கை | அனுமதிக்கப் பட்ட கோரிக்கைகளின் எண்ணிக்கை | அனுமதிக்கப்பட்ட கோரிக்கைகளின் சதவீதம் | நிலுவையாக வுள்ள மூலதனம் (ரூ.பில்) |
| குத்தகை வசதிகள் | 883 | 809 | 91.62 | 3.2 | 122,591 | 116,276 | 94.85 | 33.4 |

* அதே கடன்பெறுநர் வேறுபட்ட திட்டங்களின்/ கட்டங்களின் கீழ் சலுகைகளைப் பெற்றிருக்கலாம்.